செய்தி வெளியீடு எண். 439 நாள். **29.5.2010**

# செய்தி வெளியீடு

## 633 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மாநகரில் மழைநீர் வடிகால் மற்றும் கால்வாய்கள் அமைத்தல், சீரமைத்தல் திட்டப் பணிகள்! முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்!

சென்னை மாநகரில் ஆண்டுதோறும் வடகிழக்குப் பருவமழையின்போது ஏற்படும் வெள்ளப் பெருக்கினால் தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் புகுந்து மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுவதுடன், உயிர்களுக்கும் உடமைகளுக்கும் சேதங்கள் ஏற்படுகின்றன. இவை காரணமாக அரசுக்கு அவ்வப்போது கோடிக்கணக்கான ரூபாய் செலவு ஏற்படுகிறது. இந்நிலையை முற்றிலும் தவிர்க்கும்பொருட்டு, சென்னை மாநகராட்சி, பொதுப்பணித்துறை ஆகியவற்றின் பராமரிப்பில் உள்ள வடிகால்கள் மற்றும் நீர்வழித்தடங்களை ஒருங்கிணைத்து மேம்படுத்தி சீர்செய்வதற்காக ஒரு பெருந்திட்டத்தை நிறைவேற்றிட முடிவு செய்து; அதன்படி பொதுப்பணித்துறையின்கீழ் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் 1 கோடியே 15 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மூலக்கடை அருகில் உள்ள கொடுங்கையூர் கால்வாய்ப் பகுதியை மேம்படுத்துதல்;

19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொளத்தூர் ஏரியின் உபரி நீரை மாதவரம் ஏரியின் இடதுபுற மிகைநீர் கால்வாய் வழியாக திருப்பி விடுவதற்கு மாற்றுக் கால்வாய் அமைத்தல்;

9 கோடியே 87 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஓட்டேரி நல்லா கால்வாயில் வரும் வெள்ள நீரினை கூவம் ஆற்றுக்குத் திருப்பி விட குறுக்கு வெட்டுக்கால்வாய் அமைத்தல்;

33 கோடியே 1 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஓட்டேரி நல்லா கால்வாயினை அகலப்படுத்தி மேம்படுத்துதல், வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுதல், கான்கிரீட் தரை அமைத்தல், வேலி அமைத்தல், பராமரிப்பிற்காக சாய்தளம் அமைத்தல், குறுகிய பாலங்களை அகலப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல்;

17 கோடியே 52 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மதுரவாயில் ஏரியின் மிகைநீர் போக்கி கால்வாயினை மேம்படுத்தி, மதுரவாயில் ஏரியின் உபரிநீரினை கூவம் ஆற்றுக்கு திருப்பி விடுவதற்காக மாற்றுக் கால்வாய் அமைத்தல்;

25 கோடியே 97 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் விருகம்பாக்கம் – அரும்பாக்கம் கால்வாயில் வரும் வெள்ள நீரை 100 அடி சாலையில் இருந்து கூவம் ஆற்றுக்கு திருப்பிவிட ஒரு நேர்வெட்டுக் கால்வாய் அமைத்தல்;

40 கோடியே 38 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் விருகம்பாக்கம் – அரும்பாக்கம் கால்வாயினை அகலப்படுத்தி மேம்படுத்துதல்;

**வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்தல், கான்கிரீட் தரைத்தளம் அமைத்தல், வேலி அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல்;**

**110 கோடியே 5 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் செலவில் வடக்கு பக்கிங்காம் கால்வாயினை அகலப்படுத்தி ஆழப்படுத்துதல், குறுகிய பாலங்களை மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல்;**

**68 கோடியே 62 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மத்திய பக்கிங்காம் கால்வாயினை அகலப்படுத்தி ஆழப்படுத்தி மேம்படுத்துதல்; 46 கோடியே 85 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தெற்கு பக்கிங்காம் கால்வாயினை அடையாறு முதல் லாட்டிஸ் பாலம் வரையிலும்;**

**லாட்டிஸ் பாலம் முதல் ஒக்கியம் மடுவு வரையிலும் மேம்படுத்துதல், குறுகிய பாலங்களை அகலப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல்; 78 கோடியே 13 இலட்சத்து 79 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தெற்கு பக்கிங்காம் கால்வாயினை ஒக்கியம் மடுவு முதல் முட்டுக்காடு கழிமுகப்பகுதி வரை மேம்படுத்துதல்;**

**23 கோடியே 90 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் வீராங்கால் ஓடை வடிகாலினை மேம்படுத்துதல், இருபுறமும் வெள்ளத்தடுப்புச் சுவர் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல்; 58 கோடியே 15 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் வேளச்சேரி ஏரியின் உபரிநீரை தெற்கு பக்கிங்காம் கால்வாய்க்கு, டைடல் பார்க் அருகே கான்கிரீட் மூடிய கால்வாய் மூலம் திருப்புதல்;**

**19 கோடியே 63 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அம்பத்தூர் ஏரியின் உபரி நீர் வடிகாலினை மேம்படுத்துதல்; 26 கோடியே 96 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் போரூர் ஏரியின் உபரிநீர் வடிகாலினை மேம்படுத்துதல், மிகைநீர் கால்வாயினை அகலப்படுத்தி ஆழப்படுத்துதுல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல்;**

**53 கோடியே 76 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தெற்கு பக்கிங்காம் கால்வாய் வெள்ள நீரை ஒக்கியம் மடுவு அருகில் இருந்து குறுக்கு வெட்டுக் கால்வாய் மூலம் கடலுக்கு திருப்பி விடுதல் என மொத்தம் 633 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள 17 பணிகளையும் முதலமைச்சர் கலைஞர் இன்று (29.5.2010) தொடங்கி வைத்தார். 10 சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்படவுள்ள இந்தப் பணிகள் அனைத்தையும் 3 ஆண்டு காலத்தில் நிறைவேற்றி முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கூவம் நதியைத் தூய்மைப் படுத்தி சீரமைத்திட தமிழக அரசு மூலம் ஏற்கனவே மேற்கொள்ளப் பட்டுள்ள பணிகள் முழுமைபெற தற்போது தொடங்கப்பட்டுள்ள இத்திட்டங்கள் பெரிதும் உதவியாக அமையும்.**

**இந்நிகழ்வின்போது துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மத்திய அமைச்சர் திரு. ஆ. இராசா, வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், சட்ட அமைச்சர் திரு. துரைமுருகன், தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., பொதுப்பணித் துறை செயலாளர் திரு.எஸ். இராமசுந்தரம், இ.ஆ.ப., முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு. ஜெயராமன், தலைமைப் பொறியாளர் திரு. அன்பழகன், மற்றும் உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.**

---

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,தலைமைச் செயலகம், சென்னை—9.